# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, ஹேரத் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(1998, ஏப்பிறல் மாதம் 06 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 7.75** **தபாற் செலவு: ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, ஹேரத் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஒ. 79/95

## ஹேரத் நிறுவகத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"ஹேரத் நிறுவகம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவது மான நிறுவகமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கு இணங்கச் சொல்லப்பட்ட நிறுவகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றி கொண்டுநடாத்தும் நோக்கங்களுக்கென இதற்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ளதாலும்: முன்னுரை.

சொல்லப்பட்ட ஹேரத் நிறுவகமானது, எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங் களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, ஹேரத் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியில் இருந்தும் அதன் பின் னரும் ஹேரத் நிறுவகத்தில் (இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தற்போது உறுப்பினர்களாக உள்ளவர்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன் பின்னர் சேர்த்துக்கொள்ளப்படு பவர்களான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத் துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஹேரத் நிறுவகம் என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வொன்றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அது, அப்பெயர் கொண்டே, எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அந்த இலச்சினையை நிறுத்தவும், மாற்றவும், முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும். ஹேரத் நிறுவகத் தைக் கூட்டிணைத் தல்.

2 – ஐ 044931 – 1,100 (97/ 05)

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக் கோள்கள்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :—

(அ) இலங்கையில் கல்வியை மேம்படுத்தல் ;

(ஆ) மாணவர்களின் பொதுநலத்தை மேம்படுத்துதல் ;

(இ) இலங்கையிலும் வெளிநாட்டிலும் கல்வி பயிலும் திறமை உள்ள மாணவர்கள் தமது கல்வியை அபிவிருத்தி செய்வதற்கு ஊக்கமளித்தலும், புலமைப்பரிசில்கள் வழங்குதலும் ;

(ஈ) கல்வி, உயர்கல்வி, தொழில்நுட்ப, ஆராய்ச்சி நிறுவனங் களைத் தாபித்துப் பேணுவதன்மூலமும், அந்நோக்கத் துக்கு அவசியமான கருத்திட்டங்களை உருவாக்கிப் பேணிவருவதன்மூலமும், கல்வித்துறையில் உள்ளூர், சர்வதேச மட்டத்தில் ஒன்றிணைப்பை உண்டாக்குதல் ;

(உ) கூட்டுத்தாபனம் தகுதியானதெனக் கருதுகின்ற வழியில் இலங்கை மாணவர்களின் உபயோகத்துக்கெனப் பணம், சாதனம் மற்றும் வசதிகளை அளித்தலும் ;

(ஊ) மாணவர்களின் மத்தியில் தலைமைத்துவப் பயிற்சி யினை மேம்படுத்துவதற்காகத் தேசிய விளையாட்டுக் கள் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தலும் ;

(எ) தேசிய அபிவிருத்தி மற்றும் நலன்புரி கருத்திட்டங்களில் ஈடுபடுதலும் இலங்கையினுள்ளும், இலங்கைக்கு வெளியேயும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளை யும், குழுக்கற்கைகளையும், விரிவுரைகளையும் நடாத்து தலும், கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதும் புத்தகங்களையும், பருவகாலச் சஞ்சிகைகளையும், சிற் றேடுகளையும், செய்தித் தாள்களையும், சஞ்சிகைகளை யும் அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும் அதற்கு உகந்த கருத்திட்டங்களைப் பேணுதலும், கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மான சமூக சேவைகளையும், சமூக நலன்புரிச் செயற் பாடுகளையும் தாபித்துப் பேணுதலும் ; அத்துடன்

(ஏ) மேலே கூறப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றில் எவற்றையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய எல்லாச் செயல் களையும் கருமங்களையும் செய்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் சபை.

4. (1) கூட்டுத்தாபன அலுவல்களின் முகாமையும் நிருவாகமும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கப் பொதுச்சபையினால் தெரிவு செய்யப்பட வேண்டிய ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாதோரைக் கொண்டிருக்கும் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பிடு செய்யப்படும்) பணிப்பாளர் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படல் வேண்டும்.

(2) சபையானது, அதன் தத்துவங்களுள் எதனையும், தலைவர், பணிப்பாளர் நாயகம், செயலாளர், பொருளாளர் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு இணங்கத் தெரிவு செய்யப்படும் அல்லது நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்களுக்கு மேற்படாத சபையின் உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட நிறைவேற்றுப் பேரவைக்கு உரித்தாக்கலாம் என்பதுடன், அத்தகைய பேரவையானது அத்தகைய பணிகளைச் சபையின் பணிப்புரைகளுக்கு இணங்க நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை, இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்றவர்களும், இதற்கான அட்டவணையில் அவர்கள் பெயர்கள் குறித்துரைக்கப்பட்டவர்களுமான உறுப்பினர்களைக் கொண்டமைந்த தாபனத்தின் பணிப்பாளர் சபையாக இருத்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்.

5. (1) இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையானது, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும், அவசியமாகக்கூடியவாறான அல்லது உகந்தனவான அல்லது இடைநேர்விளைவான எல்லாக் காரியங்களையும், கூட்டுத்தாபனத்தின் பெயரில் செய்வதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) முதலாம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றிச் சபையானது, பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகிக்கலாம் ; அத்துடன் நிறைவேற்றலாம் :—

(அ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனாக அல்லது வேறுவகையாக, கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளுதல் ; அத்துடன் வைத்திருத்தல் ;

(ஆ) அத்தகைய ஆதனம் எதனையும் ஈடுவைத்தல், குத்தகைக்கு விடுதல், மானியமாகக் கொடுத்தல், சாட்டுதல், கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல் ;

(இ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பணங்களை, சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய பிணைப் பொறுப்புக்களில் முதலீடு செய்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல், மூடுதல் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் பிணைப் பொறுப்பாக வைத்து அல்லது பிணைப்பொறுப்பின்றி பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திறத்தல் ;

(உ) உள்ளூரிலும் வெளிநாடுகளிலிருந்தும் நிதிகளைத் திரட்டுதலும், பெறுதலும், மானியக்கொடைகளை, கொடைகளை அல்லது நன்கொடைகளைக் காசாகவோ அல்லது பொருளாகவோ பெறுதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலைக்கமர்த்தல்.

(3) கூட்டுத்தாபனத்தின் எவ்வகையிலேனும் பெறப்பட்ட பணங்களும் ஆதனங்களும், கீழே குறிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு மாத்திரமே உபயோகப்படுத்தப்படவேண்டுமேயன்றி அதன் பாகமெதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ, இலாபப் பங்காகவோ, கடனாகவோ, அதி இலாபமாகவோ அல்லது வேறேதேனும் விதமாகவோ, கொடுபடவோ கைமாற்றவோ படுதல் ஆகாது.

ஆயினும் இந்தப் பந்தியில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள் பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாகா :

(i) கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் அல்லது பணிப்பாளர் அல்லது உறுப்பினருக்கு, கூட்டுத்தாபனத்துக்கு அவர் ஆற்றிய சேவைக்குக் கொடுபடும் நியாயமானதும் முறையானதுமான ஊதியம் ;

(ii) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் அல்லது கூட்டுத்தாபன உறுப்பினர் பங்குதாரராக உள்ள கம்பனி ஒன்றினால், கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்குக் கொடுக்கப்பட்ட கட்டடத்தின் நியாயமானதும் முறையானதுமான வாடகை ; அத்துடன்

(iii) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர், உத்தியோகத்தர் அல்லது பணியாளர் ஒருவரால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதில் அல்லது தனது கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் அல்லது செயல்படுத்துவதில், சபையின் அனுமதியுடன் கூறப்பட்ட நியாயமானதும் முறையானதுமான செலவுகளின் ஈடுசெய்கை அல்லது திருப்பிக் கொடுத்தல்.

**6.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று நிறுவகத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும், அதற்குச் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்திற்குப் போமதியானவையும், அதனால் கொடுபடற்பாலனவையுமான தனிசுகள்.

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது சபையின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், சபையினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றவும்படலாம். இலச்சினையானது சபையின் அனுமதியுடனும், அத்துடன் சபையின் இரண்டு உறுப்பினர்களது முன்னிலையிலுமன்றி எத்தகையதுமான எச்சாதனத்திலும் இடப்படலாகாது. அத்தகைய ஒப்பமிடுதல், சாட்சிக்காரராக எவரேனும் ஆள் ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**8.** (1) கூட்டுத்தாபனம், கூட்டுத்தாபனத்தின் பொதுக்கூட்டத்திலும் அத்துடன் அதில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டுக்குக் குறையாதோரின் வாக்குகள் கொண்டும் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எது தொடர்பிலும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

(அ) புலமைப் பரிசில்களை வழங்குதலும் நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தலும் ;

(ஆ) சபையின் அத்துடன் நிறைவேற்றுச் சபையின் கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை ;

(இ) சபையின் உறுப்பினர்களதும் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களினதும் அத்துடன் சேவையாளர்களினதும் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் அத்துடன் பணிகள் என்பன ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்காக, நிர்வாகசபையின் முன்அனுமதியுடன் கூறப்பட்ட அத்தகைய செலவினங்களைக் கொடுத்துத் தீர்த்தல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தலும் ; அத்துடன் அதன் குறிக்கோள்களை எய்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதிகளின் கட்டுக்காப்பும், அதன் கணக்குகளைப் பேணிவருதலும், கணக்காய்வு செய்தலும் ;

(எ) கணக்குகளை வைத்திருத்தல், பணங்களை வைப்பிலிடுதல் அத்துடன் ஆவணங்களைக் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் ; அத்துடன்

(2) அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதும் அதேபோன்ற கூட்டமொன்றிலும் அதே போன்ற விதத்திலும் மாற்றப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

9. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும் ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும் அவர்களினால், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது. குடியரசினதும் மற்றேயோரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

அட்டவணை (பிரிவு 4 (3))

1. திருமதி யாப்பா ஹேரத், ஆசிரியர்
2. திரு. கிரிபண்டா ஹேரத், ச. நீ.
3. டாக்டர் அஜந்த ஹேரத் (பணிப்பாளர் தலைமையதிபதி)
4. பேராசிரியர் ஜயந்தா ஹேரத் (பிரதிப் பணிப்பாளர் தலைமையதிபதி)
5. பேராசிரியர் சுசந்தா ஹேரத் (தலைவர்)
6. செல்வி பிரசந்தா ஹேரத்
7. திருமதி கவினிதா ஹேரத், சட்டத்தரணி.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.